# 'நீர்கொழும்பு தேர்தல் கற்பித்த பாடத்தை கல்வி மந்திரி மறந்து விட்டாரா?'

Registered as a Newspaper in Ceylon * [illegible]

# ஈழநாடு

EELA NADU

[illegible] 49
[illegible] 339

National Tamil Daily

மலர் 9
இதழ் 177
தேசிய தினசரி

[illegible] ஆடி 22 ரபி ஆகி. 29 திங்கட்கிழமை [7-8-67]

### வட்டுக்கோட்டை எம். பி. கேட்கிறார்

சங்கானை, ஞாயிறு

''இந்நாட்டு சிறுபான்மையோரான தமிழர்களும் கிறிஸ்தவர்களும், கல்வித் துறையில் அடைந்த முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் கல்வி அமைச்சர் எடுத்துவரும் வகுப்புவாத நடவடிக்கை காரணமாக நீர்கொழும்பு இடைத்தேர்தலில் அரசாங்கத்திற்கு பெரும் எதிர்ப்பு தோன்றியது. கல்வி அமைச்சரின் பதவியே ஆட்டம் காணுமளவிற்கு நீர்கொழும்பு சிறுபான்மையோருக்கு வாக்குறுதிகள் கொடுக்கப்படவேண்டியேற்பட்டது. இதன்பின்பும் கல்வி அமைச்சர் குமுறுவது ஏன்?''

யாழ்ப்பாண கல்லூரி அதிபர் திரு செல்லையாவிற்குசேவை நலம்பாராட்டு விழாவில், வட்டுக்கோட்டை எம். பி திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

[6ம் பக்கம் பார்க்க]

# மாவட்ட சபை மசோதாவும் தமிழ்காங்கிரஸ் நிலையும்

## பருத்தித்துறை மகாநாட்டுக்கு வரவிருக்கும் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, இதனை தமிழ்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்துவாக்களிப்பதுடன்பாராளுமன்றத்திற்கு வெளியிலும் மாவட்டசபையினால் தமிழினத்துக்கு ஏற்படவிருக்கும் தீமைகளை பொதுமக்களுக்கு விளக்கவேண்டும்.

பருத்தித்துறையில் இம்மாதம் 25ந் திகதி ஆரம்பமாகும் தமிழ் காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் பொதுச்சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானமொன்றும் நிவைவேற்றப்படவிருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்துப்பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமான மற்றொருதீர்மானத்தை தமிழ்க்காங்கிரஸ் கொழும்புக்கிளை கொண்டுவருமென்றும் தெரியவருகிறது.

தமிழ்காங்கிரஸ் தலைமைப்பீடத்திலும் முக்கிய மாற்றங்கள் ஏற்படவிருப்பதாக தெரியவருகிறது. உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தை புதிய தலைவராகத் தெரிவு செய்வதற்கு வாலிப முன்னணியினர் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும், தலைமைப்பதவியை மட்டுமன்றி நிர்வாகக் கமிட்டி உறுப்பினராகவும் வாலிபர்களையே தெரிவுசெய்ய வேண்டுமென திரு. பொன்னம்பலம் கருதுவதாகவும் அறியப்படுகிறது.

## முத்தையன்குளத்தில் யாழ். மக்கள் குடியேற்றப்படுவர்

வவுனியா, ஞாயிறு

முத்தையன் குள குடியேற்றத்திட்டத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் குடியேற்றப்படவிருக்கிறார்கள். இத்திட்டத்தில் ஏற்கனவே 300க்குமதிகமான படித்த வாலிபர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பகு[illegible]யில் உள்ள சகல காரியாதிகாரிகள் பிரிவிலிருந்தும், இந்தத் திட்டத்தில் குடியேற்றப்படுவார்கள். சுமார் 6 ஆயிரம் ஏக்கர் குளநீர் நீர் பாய்ச்சலில், இவர்கள் குடியேற்றப்பட்டு உப உணவு உற்பத்தியை அதிகரிக்க ஒழுங்குகள்செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 6000 ஏக்கரிலும் உபஉணவுப் பயிர்கள் மட்டுமே செய்யப்பட்டுவருமாம்.

## மீண்டும் இன்று சமாதான மகாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

கொடிகாமப் பகுதியில் அமைதி நிலவுவதற்கு இரு தரப்பினரும் சம்மதம்தெரிவித்தபோதிலும் இதன்பின்னரும் அங்குசிலசிலசம்பவங்கள் நிகழ்ந்துள்ளதால் இன்று திங்கட்கிழமை பிற்பகல்சாவகச்சேரி 'டிறிபேர்க்' கல்லூரியில் மற்றொரு சமாதான மகாநாட்டை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டெண்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம்கூட்டுவதற்கு ஒழுங்கு செய்திருக்கிறார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில நடந்த சமாதான மகாநாட்டுக்குப் பின்னரும் சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது பற்றி சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திருவாளர்கள் ஜி. நல்லையா, திரு. எம். ஸி சுப்பிரமணியம் திரு. நடராசா ஆகியோர் நேற்றுக் காலை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டண்ட் திரு. சுந்தரலிங்கத்தைச் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறினர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நடந்த சமாதான மகாநாட்டில், இரு சமூகத்தினரும், சமாதானமாக வாழச் சம்மதம் தெரிவித்த பின்னரும், கொடிகாமத்தில் தாக்குதல் சம்பவங்களும் கைகலப்புகளும் நடைபெற்றுள்ளன. கொடிகாமம் சந்தைக்கு சாமான் வாங்க வந்த ஒருவரை ஒரு கோஷ்டியினர் வெட்டியதாகவும். ஆபத்தான நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்ப தாகவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினமிரவு கொடிகாமம் சந்தைக்கருகாமையில் எறிவெடி வீசப்பட்டதாகவும் இதனால் ஒருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

நேற்றுக்காலையும் ஒருவர் சந்தியில் பலமாகத் தாக்கப்பட்டதாகவும், மற்றொருவரை ஒரு கோஷ்டியினர் துரத்திச் சென்று தாக்கமுற்பட்டபோது பொலிஸார் விரைந்து காப்பாற்றினார்களென்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ்கோஷ்டியினர் இரவுபகலாகத் தொடர்ந்து ரோந்துசுற்றிவருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொலிஸ் கோஷ்டியுடன்சென்று பல இடங்களைச் சோதனையிட்டார். கொடிகாமப் பகுதிகளில் இரகசியப் பொலிஸாரும் மாறுவேடத்தில் நிலைமையை அவதானித்து வருவதாகக் கூறப்படுகிறது. சந்திக் கருகாமையிலுள்ள கள்ளுக்கொட்டில்கள் மூடப்பட்டுள்ளன.

மீண்டும் அமைதி நிலவும் வரை பொலிஸார் இரவு பகலாகத் தொடர்ந்து ரோந்து சுற்றிவருகின்றன தெரியவருகிறது.

---

கல்கத்தா, ஆக. 6

மேற்கு வங்காள அரசாங்கத்தின் ஒரு பகுதியாக விளங்கும் எந்தக் கட்சியும், வேலைநிறுத்தத்தைத்தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜோய்முக்கர்ஜி, இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

## தமிழ் அரசாங்க ஊழியர் லிகிதர் சங்கத்திலிருந்து ராஜினமா செய்வர்?

கொழும்பு, ஞாயிறு

1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி வேலை நிறுத்தம்செய்த அரசாங்க ஊழியர்களை அரசாங்கம் தற்காலிக வேலைநீக்கம்செய்ததைத் தொடர்ந்து அரசாங்க லிகிதர்சேவா சங்கம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கானமுயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாக தெரியவருகிறது.

தற்பொழுது அரசாங்க லிகிதர்சேவாசங்க காரியதரிசியாக கடமையாற்றும் ஐ. ஜே. விக்கிரமா ஜனவரி 8-ந் திகதி நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதன்காரணமாக தற்காலிகமாக வேலை நீக்கம்செய்யப்பட்டிருந்தார். திரு. விக்கிரமா தன்னை உடனடியாக வேலைக்கு அமர்த்தும்படி கோரி கோர்ட்டில் மனுவொன்றை தாக்கல்செய்யவிருக்கிறார்.

அரசாங்க லிகிதர் சேவா சங்கத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் இது சம்பந்தமாக செயற்குழுவினருக்கு அதிருப்தி தெரிவித்திருப்பதாகவும், சிங்கள சட்டத்தின் காரணமாக தங்கள் வருடாந்த சம்பள உயர்வு தடை செய்யப்பட்டபோது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளக் கோரியிருந்தும் அதனை அசட்டைசெய்து நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார். இப்பாகுபாட்டு நடவடிக்கை காரணமாக தமிழ் அரசாங்க ஊழியர்களில் பலர் சங்கத்திலிருந்து ராஜினமாசெய்ய விருப்பதாக அறியப்படுகின்றது.

## திருமலை ஆஸ்பத்திரியில் பெண் கங்காணிகளின் அசிரத்தை போக்கு

திருக்கோணமலை, ஞாயிறு

திருகோணமலை அரசாங்க மருத்துவ மனையில் நோயாளர்களை மேற்பார்வை செய்யும் பெண் கங்காணிகள் அசிரத்தையுடன் நடப்பதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது

இரவு நேரங்களில் எழும்பி நடக்க முடியாத நோயாளிகள் இக் கங்காணிப் பெண்களை அழைத்தாலும் அவர்கள் செவியில் நோயாளர் குரல் கேட்காதிருக்கிறதாம் அரசாங்க மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு நோயைக் குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் மருத்துவ மனையை வந்தடையும் பல தரப்பட்ட நோயாளிகள் மேற்படி கங்காணிப் பெண்களின் அசிரத்தைப் போக்கினால் இரண்டு, மூன்று தினங்களிலேயே அரசாங்க மருத்துவ மனையை விட்டு விடுபட்டு பிரத்தியேக மருத்துவ மனையில் பணத்தைக் கொடுத்து நோயைக் குணப்படுத்த வேண்டியிருக்கிறதாம்.

### விவசாய பயிற்சி

திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி வகுப்பு அரசாங்க விவசாயப்பயிற்சி உத்தியோகத்தர்களுக்கென திருமலை உதவி அரசாங்க அதிபர் அவர்களின் தலைமையில் பல விவசாய உயர்தர அதிகாரிகள் முன்னிலையில் திருமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் 3.8-67 காலை 9 மணிக்கு நடைபெற்றது.

### பலத்த காயம்

திருகோணமலை பத்தாங் குறிச்சி மக்களின் தொழிலுக்கு உதவும் மின்சாரப் படகொன்று பன்னிரண்டு வயதுப் பையன் ஒருவன் மீது கரையில் நின்று பழுது பார்த்துக் கொண்டிருக்கையில் மோதுண்டதன் விளைவாகச் சிறுவன் பலத்த காயங்களுடன் திருமலை அரசாங்க மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

---

### வரட்சி

மல்லாவி, ஞாயிறு

இப் பகுதியில பல மாதங்களாக மழையில்லாமையினால் பெரும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இப் பகுதியிலுள்ள பல குளங்களில் தண்ணீர் வற்றியமையினால் காட்டு மிருகங்களும் கால்நடைகளும் குடிக்கத் தண்ணீரின்றி கஷ்டமடைகின்றன. இவ் வரட்சிநீடிக்குமானால் குடிக்கவும் தண்ணீர் இல்லாத நிலைமை உருவாகுமென அஞ்சப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

"உலகிலேயே உங்களுக்கு ஒரேஒரு விரோதி இருப்பினும், அவரிடம் சென்று சிநேகிதம் செய்து கொண்டு பிறகு என்னிடம் வாருங்கள்" என்ருர் இயேசுநாதர். யாரிடமும் வெறுப்போ துவேஷமோ இல்லாமலிருந்தால்தான் இறைவன் அருள் கிடைக்க முடியும்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு ஆடி 22 உ (7-8-67)


## பெண்கள் குடியேற்றம்

"பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்தவந்தோம்
எட்டுமறிவினில்
ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்ற அமரகவி பாரதியாரின் வாக்கு சிறிது சிறிதாக 'மெய்த்து' வருகிறது. இதற்கு நேற்று மிருசுவிலில் நமது இளம் பெண்கள் சிலர், இலங்கையிலேயே முதல் தடவையாக, தமக்கெனத் தனியாக ஒரு குடியேற்றத் திட்டத்தில் குடியேறியிருப்பது சான்று.

பெண்கள் பானை பிடித்தால் மட்டும் போதாது பானைக்குள் வேக வேண்டிய அரிசியையும் உற்பத்தி செய்வதற்கு நாங்களும் முன்வந்துவிட்டோம் என்று கூறுவது போல் 'அடுப்பூதும்பெண்களல்ல; படித்த பெண்கள்' முன்வந்துள்ளனர். விவசாயத்திலும் உழைப்பிலும் என்றும் முன்னணியில் நிற்கும் யாழ்ப்பாணப் பகுதியில்தான் பெண்கள் குடியேற்றத் திட்டமும் முதன்முதலில் ஆரம்பமாகியிருக்கிறது.

சோவியத் யூனியன், சீனு போன்ற சோஷலிஸ்ட் நாடுகளில் உடலுழைப்பிலும் பெண்கள் முன்னணியில் நிற்பது உலகறிந்த விஷயம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் பெண்கள் பெரிய பெரிய பதவிகளில் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக நின்று நாட்டுக்குப் பணி செய்வது தெரிந்ததே. சமீபத்தில் இஸ்ரேல்—அரபு நாடுகளின் யுத்தத்தின்போது போர்முனைகளில் இஸ்ரேலியப்பெண்கள் தங்கள் நாட்டைக் காப்பதற்கு துப்பாக்கி ஏந்திப் போரிட்டனர். இந்தப் பெண்கள் சண்டைக் காலத்தில் போர் முனைகளில் நாட்டை எதிரியிடமிருந்து காப்பாற்றும் வீராங்கனைகளாகவும் சமாதான காலத்தில் நாட்டை வறுமையிலிருந்து பாதுகாக்கும் விவசாயிகளாக — தொழிலாளிகளாகவும் பணிபுரிகின்றனர்.

வீட்டைக் காக்கும் பணியில் திளைத்த நமது நங்கையர் நாட்டைக் காக்கவும் புறப்பட்டுவிட்டனர். மிருசுவிலில் குடியேறும் நமது சகோதரிகள் நமது இந் நாட்டுக்கு மட்டுமல்ல உலகின் இதர பல நாடுகளுக்குமே வழிகாட்டுவார்களென எதிர்பார்த்து அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவிக்கிறோம்.

பெண்களே குடியேற்றத் திட்டங்களில் குடியேறி விவசாயத்திலீடுபட முன்வந்துவிட்டார்களென்றால், நாற்காலி உத்தியோகத்தை இதுவரை நம்பியிருந்த இளைஞர்கள் இனியும் அதை எதிர்பார்த்து ஏங்கி நிற்பார்களென எதிர்பார்க்க வேண்டுமா?

"நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே"

என்பது பாரதியாரின் வாக்கு. பெண்கள் வயலிலிறங்கிவிட்டால் ஆண்கள் நாற்காலியிலா அமர்ந்திருக்கப் போகிறார்கள்?

எனவே மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்தை உருவாக்கியவர்களை பெண்கள் மட்டுமல்ல, பெண்ணைப் பெற்றவர்களும் இந்த நாடுமே வாழ்த்தும் காலம வெகு தூரத்திலிருக்காது என்று கூறலாம்.

# "ஆங்கில வைத்தியர்களுக்கு கொடுக்கும் சம்பளம் வேண்டும்"

## ஆயுள்வேத வைத்திய சங்கத்தலைவர் கோரிக்கை

சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கல்நாட்டுவிழாவைச் சுகாதார மந்திரி கைதடியில் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைத்தபோது அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தலைவரும் வைத்தியக் கவுன்சில் உறுப்பினருமான வைத்தியாச்சாரிய திரு. அ. க. குமாரசாமி நிகழ்த்திய சிறப்புரையின் சுருக்கம்:-

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கமாகிய எமது சங்கம் பிரித்தானிய அரசாங்க காலத்திலிருந்து எங்களுக்கோர் கல்லூரியும், வைத்தியசாலையும் வேண்டுமெனக் கேட்டு வந்திருக்கிறது. அதன்பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்த 'குப்தாக் மிஷன் சித்தவைத்தியத்துக்கு உறைவிடமான யாழ்ப்பாணத்திலே ஓர் சித்த வைத்தியக் கல்லூரியும், சித்த வைத்தியசாலையும் அவசியமெனக் கூறியுள்ளது. எங்கள் சங்கம் இதை நிறுவுவதற்குப் பலமுறை முயற்சித்தும்கைகூடவில்லை. அதன்பின்னர் முதலாவது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்நாட்டை ஆளுகைசெய்தது. காலஞ்சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது, எமதுசங்கம் பேட்டிகண்டு ஒரு மகஜரைச் சமர்ப்பித்து சுதேசவைத்தியசாலை, சுதேச வைத்தியக் கல்லூரி, சுதேச மூலிகைத் தோட்டம் முதலியவற்றைத் தாபித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. கௌரவமந்திரியார் சுதேசவைத்தியக்கல்லூரியையும் சுதேச வைத்தியசாலையையும்கூடிய விரைவில் அமைத்துத் தருவதாகவும் கூறினார்கள். ஒரு சுவாத்தியத்திலே வளரும் மூலிகைகள் இன்னொரு சுவாத்தியத்திலே வளரமாட்டாது. ஆகையால் மாகாணரீதியில், இம் மூலிகைத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டு வைத்தியர்களுக்கு மூலிகைகளை உதவுவதாகவும் கூறினார்கள். துரதிஷ்டவசமாக அவர் குறுகிய காலத்தில் எம்மை விட்டுப்பிரிந்துவிட்டார்கள். ஆனால் ஐ.தே.க. அரசாங்க காலத்திலேயே சுதேசவைத்தியக்கல்லூரியையும், சுதேச வைத்தியசாலையையும்நிறுவுவதற்கு அக் காலத்திலே பாராளுமன்றத்திலே இருந்த முன்னைநாள் சாவகச்சேரி எம். பி. வி. குமாரசாமியால் பேசப்பட்டு அடையாளமான்யமாகப் பத்து ரூபாவும் ஒதுக்கப்பெற்றுள்ளது. அதன் பின்வந்த அரசாங்கங்களுக்கு நாங்கள் பலமுறை விண்ணப்பங்கள் செய்தும் அவைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று.

இப்பொழுது வந்த தேசிய அரசாங்கமும் சுகாதார மந்திரி திரு. ஜெயவர்த்தனு இவ் விஷயத்திலே எமது சமூகத்திற்கு நன்மை செய்யக் கருதி முதற்படியாக இச் சுதேசவைத்தியசாலையை நிறுவுவதற்கு முற்பட்டமைக்கு நாங்கள் எங்கள் பெருநன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மேலைத்தேச வைத்தியம் கற்ற வைத்தியர்கள் சுதேச வைத்தியர்களைக் கீழான நிலையில் மதித்து 'நடிப்பவர்கள்' என்னும் பட்டம் சூட்டுகிறார்கள். ஆகவே நான் எங்கள் சுதேசவைத்தியப்பகுதி ஆணையாளரைக் கேட்டுக்கொள்கிறேன். சுதேச வைத்திய மாணவர்களுக்கு மேலைத்தேச வைத்திய மாணவர்களைப்போல் பாடங்களைக் கற்பித்து அவர்களும் மேலைத்தேச வைத்தியர்களின் அறிவைப்பெற்று அவர்களைப் போல சமசம்பளம் பெறக்கூடியதாகவும் செய்யவேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம்

# உருமபராய் ஐ.ப.சாலையும் புதிய பட்டின சபையும்

உரும்பராய் தெற்கு ஐக்கியபண்டகசாலை 1943ம் ஆண்டு ஆரம்பமாயிற்று. பல ஆண்டு காலமாக, இப்பண்டகசாலை எவ்வித முன்னேற்றமுமின்றி இயங்கிவந்தது. கூட்டுறவுப் பகுதியினர் இதை மூடிவிடவும்தீர்மானித்தனர்.

இந்தக் கட்டத்தில், திரு. நா. நடராசா என்பவர்எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினுல். திறமையும், நேர்மையும் மிக்க நிர்வாகசபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டது யாவரும் எதிர்பாராத விதமாக, பண்டகசாலை திறம்பட நடந்து வந்தது.

இப்பண்டகசாலை இயங்க ஆரம்பித்து இத்தனை வருடங்களாகியும், அதற்குச் சொந்தமான ஒரு கட்டிடம் இல்லை. வாடகைக்கட்டிடம் நல்லதல்லவென்பதை நிர்வாகசபை உணர்ந்தது. உரும்பராய்ச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக்காணி தேடித் தந்தால், குறைந்தது ரூ. 40,000 வங்கியில் கடனெடுத்துக் கொடுப்பதாகப் பிரதம கூட்டுறவுப் பரிசோதகர் உறுதியளித்திருந்தார்.

இதை அடிப்படையாகக் கொண்டு, ரூ.12,000க்கு ஐ. ப. சாலை நிர்வாகசபை, தற்போது கிராமச்சந்தையுள்ள காணியில் 2 பரப்புக் காணியை வாங்கியது.

ஆனுல், இதற்கிடையில், ஐ.ப.சாலை சந்தியில் வருவதால் தமது சொந்த நலன்களுக்கு இடையூறு ஏற்படுமென்ற காரணத்தால், சிலர் இந்தத்திட்டத்தை எதிர்க்க முற்பட்டனர்.

உரும்பராயில் புதிய பட்டினசபைக்கான தேர்தல் நடைபெறும் சமயமாகவும் இருந்தது. இந்தச்சந்தர்ப்பத்தில், பட்டினசபைத் தேர்தலில், ஐ.ப சாலையைச் சந்தியிலுள்ள காணியில் நிறுவுவதை ஒரு தேர்தல் பிரச்னையாக்கிவிட்டனர்.

மக்களிடையேபொய்ப்பிரசாரங்கள் செய்யப்பட்டன. உரும்பராய்ச் சந்தியில் சந்தை வேண்டுமென்றுல் ஐ.ப.சாலையைச் சந்தைக் காணியில் நிறுவுவதை ஆதரிக்கும் அபேட்சகர்களுக்கு வாக்குப்போட வேண்டாமென்றும், மக்களிடையே சிலர் கூறினர்.

இப்பிரச்சாரம் ஓரளவு வெற்றியளித்துள்ளது வருந்தத்தக்கதேயாகும்.

கூட்டுறவு இயக்கத்தை அரசாங்கமே முன்னின்று ஆதரித்து வளர்க்க முற்பட்டுள்ள இந்நாளில் [illegible] நல்ல முறையில் எமது கிராமத்தில் செயற்படுவதனுல் ஏற்படக்கூடிய நன்மைகளை எமது கிராம மக்கள் உணராதது மிகவும் வேதனைக்குரியதொன்றுகும். அவர்கள், பயனற்ற போலிப்பிரச்சாரத்துக்குப் பலியாகிவிட்டார்கள்.

குறிப்பிட்ட சந்தைக் காணி 7 பரப்பு விஸ்தீரணமுள்ளது. இதில் 2 பரப்பு ஐ.ப சாலைக்கென ஒதுக்கப்பட்டாலும், மீதியாக 5 பரப்பு இருக்கிறது. இது எமது கிராமத்துச் சந்தைக்குப் போதாதா? அதிக வியாபாரம் நடக்கும் திருநெல்வேலிச் சந்தையே ஆக இரண்டரைப் பரப்பில்தான் நடக்கிறது.

ஐ.ப. சாலையின் நிர்வாகத்தின் நோக்கம், ஐ.ப. சாலை வெறும் கூப்பன் கடையாக மாத்திரம் இல்லாமல், ஒரு பெரும் சமாஜமாக அதை ஆக்கி, நீர்வேலி, சுன்னுகம் போன்ற சமாஜங்களுக்குச் செல்லாது, இவ்வூரிலேயே பெரிய சமாஜத்தின் கிளையாக இருக்கவேண்டுமென்பதேயாகும்.

இந்த நல்ல நோக்கத்துடன் கூடிய ஒரு முயற்சியை முறியடிக்க முற்பட்டதன் மூலம்- ஒரு சிலர், கிராமத்துக்கு மட்டுமன்றித்தமக்கும் தமது சந்ததியாருக்கும் தீமைத் தேடித்தரும் வகையில் நடந்துள்ளனர்.

இவர்கள், உரும்பராய்க்கு ஒரு பெரிய சந்தை நிறுவவேண்டுமென்ற நோக்கம் கொண்டுள்ளனர் என்று வைத்துக்கொள்வோம். இவர்களுடைய கற்பனைக்கு ஏற்ப, இப்போதைய சந்தைக்காணி போதாது. உரும்பராய் பறுபதபத்தினி அம்மன் கோவில் எதிராகநல்ல விஸ்திரணமுள்ள முடிக்குரிய காணி இருக்கிறது. இதனை எடுக்க ஏன் அவர்கள் முயற்சிக்கக் கூடாது?

சந்தை தேவைதான். ஆனுல், ஐ. பண்டகசாலையோ தேவை மட்டுமல்ல, அவசியமானதும் கூட. பொது மக்களின் நன்மையை முன்னிட்டே அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியும், உற்சாகமுமளித்துவருகிறது. ஆனுல், நாமே நமக்கு குழிதோண்டும்போது, அரசாங்கம் தான் என்னசெய்ய முடியும்?

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும், எமது கிராமத்தின் வருங்காலத்தை மனதிற்கொண்டு, சமரசஉடன்பாட்டுக்கு வந்து, கிராமத்துக்கு அவசியமான ஐ. ப.

[6-ம்பக்கம் பார்க்க]

## நாட்டிலும் நகரிலும்

'இலங்கை மண்ணில் விழும் ஒரு சொட்டு மழை நீர் தன்னும் வீணுகப்படாது' என்ற விழுமிய நோக்கத்துடன், பராக்கிரம சமுத்திரம் போன்ற பல பெரிய குளங்களைக் கட்டி, சிங்களவரையும் தமிழரையும் சமமாக நடத்தி, இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட மாமன்னன் மகா பராக்கிரமவாகு. சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் சிங்கள மன்னர் வரிசையில் அவனுக்கே முதலிடம் அளிக்கிறுர்கள்.

துட்ட கெமுனு என்பவனும் ஒரு பெரிய சிங்கள மன்னன். ஆனுல், சில சிங்களவர்கள் இவனை பராக்கிரமவாகுவிலும் ஒருபடி மேலே உயர்த்திவைத்தே பேசியும் எழுதியும் கருதியும் வருகிறுர்கள் இதற்கு ஒரே ஒரு காரணம் அவன், நீதி வழுவா நெறிமுறையில் ஆட்சி புரிந்துவந்த ஏலாளன் என்ற தமிழ மன்னனைப் போர்க்களத்தில் வென்று கொன்றதுதான்!

கெமுனு என்ற பெயரை சாஸ்வதமாக்குவதற்காக, போர்க் கப்பல்களுக்கும், போர்ப் படைகளுக்கும் அவனுடைய பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சி. எல். ஐ. என்ற இராணுவப் பட்டாளத்தில் செல்லமாக ஓர் ஆனைக்குட்டி வளர்க்கிறுர்கள். இதற்கு 'கந்துலா' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? எல்லாளனை கொன்ற போது துட்டகெமுனு ஏறிச் சென்ற யானையின் பெயர் 'கந்துலா'!

தண்ணீர் குடிக்கச் சென்ற ஆட்டுக்குட்டியைப் பார்த்து 'உன் கொப்பாட்டன் இந்த நீரை அசுத்தப்படுத்திவிட்டான், ஆகையால் உன்னைக் கொல்லவேண்டும்" என்று ஒநாய் சொன்னதாம்,

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சிங்கள-தமிழ் மன்னர்களிடையே நடந்த ஒரு சண்டையை எடுத்ததற்கெல்லாம் சுட்டிக்காட்டுவதில் அந்த ஓநாய்க் கதையின் சாயல் ஒடுகிறது.

சிங்களவரையும் தமிழரையும் ஒற்றுமைப்படுத்தி எழுபது ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக அரசோச்சிய நன் மன்னன் மகா பராக்கிரமன் பெரியவனல்ல, தமிழ் மன்னனை வென்ற துட்டகெமுனுவே பெரிதாகத் தோன்றுகிறுன்!

[6-ம்பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

7-8-67
திங்கட்கிழமை
[ஆடிமாதம்22-ந்திகதி]

நட்சத்திரம் - மகம்
திதி - பிரதமை பகல் 7-04 வரை மேல் துதியை.
சுபநேரம் 12-04-1-34
ராகுகாலம் 7-34-9-04

மேடம்- அதிகார சம்பத்து
ரிஷபம்- உழைப்பில் சோர்வு
மிதுனம்- மனநிறைவு
கடகம்-நம்பிக்கெடுதல்
சிங்கம்-சோம்பல்மிகுதி
கன்னி- ஜெயமுண்டு பயமில்லை
துலாம்-குடும்பத்தில் பூசல்
விருச்சிகம் - எதிர் பாராத வரவு
தனுசு - வாழ்த்தும் வனமும்
மகரம்-அவப்பெயர் கேட்டல்
கும்பம்-விருந்துபசாரம்
மீனம்-அலைசசல்அதிகம்

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலும்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரக சிப்பந்திகளின் நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடு

# சீன அரசாங்கம் விதித்துள்ளது

## ஜாகர்த்தாவில் சீனத்தூதரகத்துக்கு பலத்த இராணுவக் காவல்

பீகிங், ஆக. 6

**பீகிங்கிலுள்ள இந்தோனேஷியத் தூதரகத்தைச் சேர்ந்த சகல சிப்பந்திகளின் நடமாட்ட உரிமைகளையும் கட்டுப்படுத்துவதெனச் சீன தீர்மானித்துள்ளது.**

**இந்தக் கட்டுப்பாடு உடனடியாக அமுலுக்கு வரும். இந்தோனேஷியாவிலுள்ள சீனத்தூதரகம் தாக்கப்பட்டதைத்தொடர்ந்து, இந்த முடிவைச் சீன அரசாங்கம் எடுத்துள்ளது.**

இந்தோனேஷியாவில் சீன எதிர்ப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, அங்குள்ள சீனத்தூதரகச் சிப்பந்திகளுக்குப் பந்தோபஸ்து அளிக்கப்படும் வரை, பீகிங்கிலுள்ள இந்தோனேஷியத் தூதரகத்துக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு நீடிக்குமெனச் சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீனத்தூதரகச் சிப்பந்திகள் மீது இந்தோனேஷிய ஆர்ப்பாட்டக்காரர் தாக்கிய சம்பவத்தையிட்டுச் சீன வெளியுறவு அமைச்சகம் நேற்று ஓர் ஆட்சேபக் குறிப்பை இந்தோனேஷியத் தூதரகத்தில் தாக்கல் செய்தது.

**விளைவுகள் பற்றி எச்சரிக்கை**

தமது நடவடிக்கைகள் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள இந்தோனேஷியத் தூதரகச் சிப்பந்திகள் அக்கட்டுப்பாட்டை மீறினால், அதனாலேற்படக்கூடிய விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளிகளாகவேண்டியிருக்கும் எனச் சீன எச்சரிக்கைசெய்துள்ளது.

சீனாவின் நடவடிக்கைக் கட்டுப்பாட்டு விதிகளின் விளைவாக, இந்தோனேஷியத் தூதரகச் சிப்பந்திகள், தமது தூதரக வளவுக்குள்ளேயே தங்கவேண்டி ஏற்பட்டுள்ளது. வளவைவிட்டு அவர்கள் வெளியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம், இந்தோனேஷியத் தலைநகரான ஜாகர்த்தாவில், பல நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர், அங்குள்ள சீனத்தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்கள் தூதரகத்தில் ஒரு மகஜரை ஒப்படைக்கச் சென்றிருந்தனர். ஆனால் சீனத்தூதரக அதிகாரிகள் மகஜரைச் சமர்ப்பிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி மறுத்து விட்டார்கள்.

**துப்பாக்கி பிரயோகம்**

இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர் தூதரகத்தைத் தாக்கினர். அப்போது, சீனத் தூதரகத்திலிருந்தவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் விளைவாக, 5 ஆர்ப்பாட்டக்காரரும், ஓர் இந்தோனேஷிய இராணுவ வீரரும் காயமுற்றனர். தூதரகத்திலே பாதுகாப்பாகத்தங்கியிருந்த சீனத்தூதரகச் சிப்பந்திகள் எவருக்கும் காயமேற்படவில்லை,

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, நேற்று, ஆயுதந்தாங்கிய ஆயிரத்துக்குமதிகமான இந்தோனேஷிய ஆர்ப்பாட்டக்காரர், சீனத் தூதரகத்தை மீண்டும் தாக்கினர். இத்தாக்குதலின் 4 சீனத்தூதரகச் சிப்பந்திகள் காயமடைந்தனர். தூதரகக் கட்டிடத்தின் சில பகுதிகளுக்கும் தீவைத்தனர்.

**இராணுவ பாதுகாப்பு**

ஆர்ப்பாட்டக்காரரை, இந்தோனேஷிய இராணுவத்துருப்புகள் வந்து அப்புறப்படுத்தினர். பின்னர், துருப்பினர் சீனத் தூதரகத்தைச் சுற்றிப் பலத்த காவல் போட்டுள்ளனர்.

---

# மத்திய சீனாவில் பலத்த சண்டை

## வூஹான் மாகாணத்துக்கு புதிய இராணுவ தளபதி

பீகிங், ஆக. 6

மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே பலத்தசண்டைகள் ஏற்பட்ட இடமான மத்திய சீன மாகாணமான வூஹானில் புதிய இராணுவத் தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய தளபதி, பதவியேற்றபின், ஒரு கூட்டத்தில் பேசுகையில், வூஹானில் மா ஆதரவாளர்கள் எதிர்த்தரப்பினரை முறியடித்துவிட்டதாகத் தெரிவித்தார்.

**தொடர்ந்து கலவரம்**

ஆனால் சீனாவிலிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள், வூஹான் மாகாணத்தில் தொடர்ந்து கலவரங்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் நேற்றுப் பீகிங்கில் செங்காவலரின் கலாசாரப் புரட்சியின் முதலாவது ஆண்டு பூர்த்தி விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பேசிய பல பேச்சாளர்களும், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதிகள் நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினர்.

---

# ஏவுகணை எதிர்ப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா

வாஷிங்டன், ஆக. 6

ஏவுகணை எதிர்ப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா உடனடியாக இறங்க வேண்டுமென்று அமெரிக்க செனேட் கமிட்டி ஒன்று கோரியுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் இறங்குவதற்கு சோவியத் ரஷ்யாவின் இணக்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தேவையில்லையென்றும் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

சீனாவின் ஜலவாயு குண்டு உற்பத்தி சக்தியைக் கருத்திற் கொண்டு, ஏவுகணைக்கெதிரான பாதுகாப்பு முறையை அமெரிக்கா உருவாக்க வேண்டும் என்று கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

---

# அடுத்த மாதத்தில் அரபு உச்சி மாநாடு

கார்டும், ஆக. 6

அடுத்தமாத முற்பகுதியில் அரபு நாட்டுத் தலைவர்கள் கார்டுமில் ஓர் உச்சி மகாநாட்டில் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரபு நாட்டு வெளியுறவு மந்திரிகள் மகாநாட்டின் இறுதியில் இந்த நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் மேற்காசியப் போரில் அரபு நாடுகளுக்கு எதிராக நடந்துகொண்ட நாடுகளுக்கெதிராக எடுக்க வேண்டிய பொருளாதாரத் தடைகளை விவாதிக்க அரபு நாட்டுப் பொருளாதார மந்திரிகள் அடுத்த செவ்வாய்க்கிழமை கூடுவார்களெனத் தெரிகிறது.

---

**வியட்னாமுக்கு**

## மேலதிக அமெரிக்க துருப்புகள்

### 'கடலில் போடப்படும் உப்புத் துகள்களே'

ஹனோய், ஆக. 6

தென்வியட்னாமுக்கு மேலதிகமாக 45,000 அமெரிக்க துருப்புகளை அனுப்புவதென்ற ஜனாதிபதி ஜோன்ஸனின் முடிவை வட வியட்னாம் பத்திரிகையான 'நான் தாம்' வன்மையாகக் கண்டித்துள்ளது.

வியட்னாமுக்கு அமெரிக்கா அனுப்பும் மேலதிக துருப்புகள் யாவும், 'கடலில் போடப்படும் உப்புத் துகள்களுக்குச் சமமானதே' என்று அப்பத்திரிகை வர்ணித்துள்ளது.

---

## அஹிம்சை மூலம் நிலப்பிரச்னை தீர்வு

### புதுடில்லியில் கருத்தரங்கு

புதுடில்லி, ஆக. 6

இந்தியாவிலுள்ள நிலப்பிரச்னையை அஹிம்சை மூலம் தீர்ப்பது பற்றிய கருத்தரங்கு ஒன்று நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியது.

இக்கருத்தரங்கை காந்தி சமாதான நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. வெறும் சட்டத்தினால் மட்டும் நிலப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாதென்ற கருத்து, இக்கருத்தரங்கில் வலியுறுத்தப்படும்.

கருத்தரங்குக்கு சர்வோதய இயக்கத் தலைவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமை தாங்குகிறார்.

---

## இந்தியாவுக்கு இலங்கை உதவி

### தாய்லாந்து கப்பல் கொச்சின் வந்தது

கொச்சின், ஆக. 6

தாய்லாந்திலிருந்து 10,000 தொன் அரிசியைக் கொண்ட கப்பல், கொச்சின் வந்து சேர்ந்திருக்கின்றது.

இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கை அரசாங்கம் இந்தக் கப்பலை கொழும்பிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி விட்டுள்ளது.

---

## ரூ. 50 கோடி பெறுமதியான இயந்திரங்கள்

புதுடில்லி, ஆக. 6

இந்தியாவில் அடுத்த ஆண்டில் நிறுவப்படவிருக்கும் 20 தொழில்நிலையங்களுக்கு ரூ. 50 கோடி பெறுமதியான, ஆயிரத்துக்குமதிகமான இயந்திரங்கள் தேவைப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ம. பி. அரசுக்கு பி. எஸ். பி. ஆதரவு

போபால், ஆக. 6

மத்திய பிரதேசத்தின் புதிய சம்யுக்த தள அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதென பிரஜா சோஷலிஸ்ட் கட்சி முடிவுசெய்துள்ளது.

ஆனால், அக்கட்சி மத்திய பிரதேச மந்திரிசபையில் சேராது.

---

## புதிய ஒப்பந்தம்

பீகிங், ஆக. 6

சீனா, வட வியட்னாமுடன் புதிய விமான சேவை ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டுள்ளது. விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

---

## துறைமுகங்களில் நெருக்கடி

### இந்திய மத்திய மந்திரி எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 6

"இப்போதைய உணவு நிலைமையில், துறைமுகங்களில் வேலை நிறுத்தம் போன்ற நெருக்கடியை ஏற்படுத்துவது, மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்" என இந்திய மத்திய கப்பல், போக்குவரத்து மந்திரி டாக்டர் வி. கே. ராவ் ஒரு கூட்டத்தில் பேசுகையில் எச்சரித்துள்ளார்,

---

## தாய் மொழியில் சகல பரீட்சைகள்

கல்கத்தா, ஆக. 6

மேற்கு வங்காளத்தின் ஆறு பல்கலைக்கழக உபவேந்தர்கள் நடாத்திய ஒரு மகாநாட்டில், 1968லிருந்து மேற்கு வங்காளத்தில் எல்லாப் பிரிவுகளுக்குமான பரீட்சைகள் யாவும் வங்காளமொழியிலேயே நடாத்தப்பட வேண்டும் என்று முடிவுசெய்துள்ளனர்.

மகாநாட்டுக்கு மேற்கு வங்காளக் கல்விமந்திரி தலைமைதாங்கினார். வங்காளம் தெரியாதவர்களுக்குக் கேள்வித்தாள்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் என மேற்கு வங்காள அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

# இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் 2,000 குடும்பங்கள்

## தமது தோட்டங்களில் ஏற்க தோட்ட அதிபர்கள் முடிவு

சென்னை, ஆகஸ்ட் 6

**இலங்கையிலிருந்து இந்தியா திரும்பி வருவோரில் 2,000 குடும்பங்களைத் தமது தோட்டங்களில் ஏற்றுக்கொள்ளுவதென தென்னிந்திய ஐக்கிய தோட்ட அதிபர் சங்கம் உறுதியளித்துள்ளது.**

நேற்று மத்திய புனரமைப்பு மந்திரி திரு. ஹாத்தி, தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை, ஆந்திரா, மைசூர், கேரளப் பிரதிநிதிகள், ஐக்கிய தோட்ட அதிபர் சங்கத்தினர் ஆகியோருடன் நடாத்திய மாநாட்டின்போது அதிபர்கள் இவ்வுறுதியை மந்திரிக்கு அளித்தனர்.

இந்த 2,000 குடும்பங்களும் தோட்டங்களில் எவ்வகையில் ஏற்றுக்கொள்ளப்படுவர் என்பதையும், இதர விபரங்களையுமிட்டுத் தாம் தோட்ட அதிபர்களுடன் பின்னர் ஆலோசிக்கவிருப்பதாக மந்திரி திரு. ஹாத்தி தெரிவித்தார்.

**தொழில் பயிற்சி**

இலங்கையிலிருந்து திரும்புவோரில் இளைஞர்களுக்கு நாட்டிலுள்ள 350 தொழில் நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

அந்தமானிலும் 300 குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படுமென்றும் மந்திரி அறிவித்தார்.

**வரிச்சலுகை**

இலங்கையிலிருந்து இந்தியா திரும்புவோருக்கு விவசாய வருமான வரிச்சலுகைகள் அளிக்கத் தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை முடிவுசெய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பாடசாலைகளின் புதிய அமைப்பு"

சாவகச்சேரி, ஞாயிறு "எதிர்காலத்தில் பாடசாலைகள், கனிஷ்ட பாடசாலைகள், உயர்தர பாடசாலைகள் என இருவகைப் படுத்தப்படும். கனிஷ்ட பாடசாலைகளில் முதலாம் வகுப்புத் தொடக்கம் ஏழாம் வகுப்புவரை வகுப்புக்கள் இருக்கும். உயர்தர பாடசாலைகளில் எட்டாம் வகுப்புத் தொடக்கமாக வுள்ள மேல் வகுப்புக்கள் இருக்கும். எட்டாம், ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களில் வேருெரு பாடசாலையாக்கப் போதிய பிள்ளைகள் இல்லாவிட்டால் அவ் வகுப்புக்கள் உள்ள பாடசாலைகள் 1969 தை மாதம் தொடக்கம் கனிஷ்ட பாடசாலைகளாக இயங்கும். கனிஷ்ட பாடசாலை எதிலும் எட்டாம் வகுப்பு இருக்காது. எங்கள் கல்லூரி போன்றன ஒரே வளவுள் உள்ள ஒரு கனிஷ்ட பாடசாலை, ஒரு உயர்தரப் பாடசாலையென இரு பாடசாலைகளாக அமையும். பெற்ருேர் - ஆசிரியர்சங்கங்கள், மற்றையோர் கூறும் ஆலோசனைகள், புதிய அமைப்புக்களைப் பற்றிய இறுதி முடிவு செய்யும்கல்வி அமைச்சினுல் ஆராயப்படும்."

இவ்வாறு சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் திரு. யே. வீ தம்பிநாயகம் கல்லூரிப் பரிசளிப்புவிழாவின்போது தமது அறிக்கையில், கல்வி அமைச்சுத்திட்டம் வகுத்துள்ள "பாடசாலைகளின் புதிய அமைப்பு" இதனுல் ஏற்படும் பிரதானமான மாற்றங்கள் பற்றி விளக்கிப் பேசுகையில் கூறினுர்.

## இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு சித்தங்கேணி கணேச வித்தியாசாலையில் கடந்த 37 வருடங்களாக ஆசிரியராகவும் தலைமையாசிரியராகவும் கடமையாற்றிய திரு. வ. ஈஸ்வரம்பிள்ளை இம் மாதம் தொடக்கம் பலாலி சித்திவிநாயகர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

சுழிபுரம், ஞாயிறு மானிப்பாய் பிரிவு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். சின்னத்தம்பி இம்மாதம்தொடக்கம் மட்டக்களப்புப் பகுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கோரிக்கை

கோப்பாய், ஞாயிறு கோப்பாய் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 556 அந்தர் வெங்காயம் காணுமற்போனது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி விவசாயிகள் கோப்பாய் எம். பி. திரு: சி. கதிரவேற்பிள்ளையிடம் கோரியுள்ளனர்.

## திறப்பு விழா

அளவெட்டி, ஞாயிறு அளவெட்டி கணேசன் கல்வி நிலையக் கிளை ஒன்று சமீபத்தில், மூளாயில் பண்டிதர் திரு. க. நாகலிங்கத்தினுல் திறந்துவைக்கப்பெற்றது.

## 'கருத்துவேறுபாடு உண்மைதான்; ஆனுல் . . .?'

**-- காங்கிரஸ் காரியதரிசி**

யாழ்ப்பாணம், திங்கள் "அகிலஇலங்கைத்தமிழ்க் காங்கிரஸ்கட்சியின் 22-வது மகாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வது சம்பந்தமாக பருத்தித்துறையில் நடந்த கூட்டத்தில் வாலிப முன்னணி உறுப்பினர்களுக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டது உண்மையே. ஆனுல் அந்த வேறுபாடு மகாநாட்டுக்கான ஒழுங்குகளைச் செய்வது காரணமாக ஏற்பட்டதேதவிர எந்தவிதமான அரசியல் கொள்கை காரணமாகவல்ல."

இவ்வாறு அகிலஇலங்கைத் தமிழ்காங்கிரஸ்கட்சி பொதுச்செயலாளர் திரு. சங்கரப்பிள்ளை தெரிவிக்கிருர். இந்த வேறுபாடு காரணமாக எவரும் ராஜினுமாச்செய்யவில்லையென்றும் 4-ம்திகதி நடைபெற்ற கூட்டத்தில் அவர்கள் எல்லோரும் கலந்து தங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தந்திருக்கிருர்கள் என்றும் அவர் கூறுகிருர்.

## செல்வச் சந்நிதி உற்சவம்

வல்வெட்டித்துறை, திங். தொண்டமானுறு செல்வச்சந்நிதி உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. சந்நிதானத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் திறந்த வெளியரங்கில் மாலை 6-30 மணிக்கு இசை நிகழ்ச்சிகள் உற்சவகாலத்தில் தினமும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அளவெட்டி திரு. எஸ். வீரசிங்கம்பி கதாப்பிரசங்கம் செய்கிருர்.

## 16 மிஸோக்கள் கைது

ஷில்லொங், ஆக. 6 அண்மையில் இங்கு மிஸோக்களின் தாக்குதலில், சில இந்திய துருப்பினர் கொல்லப்பட்டது வாசகர்கள் அறிந்ததே.

இதுசம்பந்தமாக நேற்று ஷில்லொங் பகுதியில், 16 மிஸோக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒரு துப்பாக்கியும், 16 சுற்றுக் காட்ரிட்ஜ்களும் கூடவே கைப்பற்றப்பட்டன.

வடமாகாண

## விவசாயிகள் போட்டியில் பரிசு பெற்ருேர் விபரம்

யாழ்ப்பாணம், திங்கள். வடமாகாணத்தில் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளிடையே நடத்தப்பட்ட விவசாயப் போட்டியில் விவசாயம் சம்பந்தப்பட்ட கேள்வி பதில் போட்டியில் முதியோர் பிரிவில் கிளிநொச்சியும், இளம் விவசாயிகள் போட்டியில் திருநெல்வேலி பெண்கள் கமத்தொழிற் பாடசாலையும், நெற்செய்கைப் போட்டியில் வலிகாமம் மேற்கும் முதல் இடங்களைப் பெற்று கமத்தொழிற் பகுதியின் பரிசுத் தொகைகளையும், பொது மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டன.

புதிய புதிய இளம் விவசாயிகளைத் தருவிக்கும் நோக்கமாகவும் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கமாகவும் பெரும் தொகையான பணத்தைச் செலவு செய்து மாவட்ட ரீதியான விவசாயப் போட்டியை ஒழுங்கு செய்த விவசாயப் பகுதி நெற்செய்கைப் போட்டியில் முதலாவது இடத்திற்கு 750 ரூபாவும், 2-ம் இடத்திற்கு 300 ரூபாவும், 3-ம் இடத்துக்கு 100 ரூபாவும் மற்றும் ஆறு 80 ரூபா ஆறுதல் பரிசுகளையும்அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற கமத்தொழில் கைத்தொழில் பொருட்காட்சியில் நடைபெற்ற கேள்வி பதில் போட்டி முதியோர் பிரிவு இளைஞர் பிரிவு என இரு பிரிவாக நடைபெற்றது. முதியோருக்கான இறுதிப்போட்டியாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே வெகு காரசாரமாக நடைபெற்றது. போட்டி முடிவில் கிளிநொச்சியே வென்றது. கிளிநொச்சிக் கோஷ்டியில் எஸ். சின்னத்துரை. எஸ். நடராசா, என். கே. நல்லதம்பி ஆகியோரும், யாழ் கோஷ்டியில் திருமதி தியாகராஜா, கே. சண்முகராசா, ஏ. ஆசீர்வாதம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இளைஞர்களுக்கான போட்டியில் திருநெல்வேலி கமத்தொழில் பாடசாலை முதலிடத்தைப் பெற்றது. இதில் கலந்து கொண்ட கிளிநொச்சியைச் சேர்ந்த ஏ. கனகரத்தினம் திருநெல்வேலி கமத்தொழிற் பாடசாலையைச் சேர்ந்த செல்வி எஸ். மனுவல், செல்வி ஆனந்தர் ஆகியோரின் கமதொழில் சம்பந்தப்பட்ட விளக்கமான பதில்கள் பாராட்டக் கூடியதாயிருந்தன. மாவட்ட ரீதியான நெற்பயிர்ச் செய்கைப் போட்டியில் வலிகாமம் மேற்கு முதலிடத்தைப் பெற்றது. இப் பிரிவில் சண்லிப்பாயைச் சேர்ந்த இராமலிங்கம் சரவணமுத்து ஒரு ஏக்கரில் 129.68 புசல் நெல் விளைவித்து பலராலும் பாராட்டப்பட்டார். மற்றும் மாணிக்கவாசகர், அமரசிங்கம் 102.5 புசலும் மூளாயைச் சேர்ந்த சிற்றம்பலம் குமாரலிங்கம் 86.5 புசலும், முறையே விளைவித்திருந்தனர்.

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் நெல் பயிர்ச்செய்

[6-ம்பக்கம் பார்க்க]


இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினுல் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனுல் இவ ஈறு வியாதியினுலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினுல் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனுல் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். அவர்களின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளைக் கலந்து தயாரிக்கப்பட்டது.

வெறும் துரையினுல் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு பற்களும் உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் பாவிப்பது ஆரோக்கியமான

உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைச் சாகித்திய மண்டலம்

### இலக்கியப் போட்டிகள்

**பாடசாலை மாணவரிடையே நடத்தப்படும்**

**மொழிபெயர்ப்புப் போட்டி**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்களில் (பல்கலைக் கழக பிரவேச வகுப்பு) பயிலும் மாணவ மாணவிகளுக்காக இப்போட்டி நடத்தப்படும்.

**மாணவர்க்கான நாடக எழுத்துப்போட்டி**

கல்லூரிகளிலோ பல்கலைக் கழகங்களிலோ பயின்று கொண்டிருக்கும் 25 வயதுக்குட்பட்ட மாணவ மாணவிகள் இப்போட்டியிற் பங்குபற்றலாம்

**கவிதை நாடக எழுத்துப் போட்டி**

தமிழ்நாடக ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படும்.

**போட்டிகள் முடிவுறும் திகதி 1-10-1967**

முழு விபரங்களையும் பிரவேசப்பத்திரங்களையும்கீழ்க் காணும் விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொதுச் செயலாளர்,
இலங்கைச் சாகித்திய மண்டலம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு—7.

55

## பாடசாலை விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெ. மி. த. கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. மாணவர் பச்சை, சிவப்பு என இருபிரிவாக நின்று பல்வேறு விளையாட்டுக்களிலும் ஈடுபட்டனர். தலைமை ஆசிரியர் திரு. த. யோகநாதன் விளையாட்டை ஆரம்பித்துவைத்தார். ஆசிரியை திருமதி ஆர். எஸ். சுகிரியாள் பரிசுகளை வழங்கினார்.

## விளையாட்டுப் போதனாசிரியர்க்கு 15 நாள் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கையின்சகல காரியாதிகாரி பிரிவுகளிலுமிருந்தும் விளையாட்டுப்பகுதி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட அததனை ஆண் பெண் விளையாட்டுப் போதனாசிரியர்களுக்கும் விளையாட்டு சம்பந்தப்பட்ட விரிவுரையும் விசேஷ பயிற்சியும் வழங்க அமைச்சு முடிவுசெய்துள்ளது.

கொழும்பை அடுத்துள்ள பன்னிப்பிட்டியா என்னும் இடத்தில் இன்று தொடக்கம் 21ந் திகதிவரையும் போதனாசிரியர்களுக்குவழங்கப்படவிருக்கும் இவ்விரிவுரை நிகழ்ச்சியில் யாழ். மாவட்டத்திலிருந்து 17 போதனாசிரியர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இலங்கையின் சனசமூக நிலையங்களுக்கும், விளையாட்டுக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் சென்று விளையாட்டுத்துறையில பயிற்சியளித்து தரமான இலங்கை விளையாட்டு வீரர்களை உருவாக்கவும், இலங்கையின் விளையாட்டுத்தரத்தை உயர்த்தவும் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட இப் போதனாசிரியர்களுக்கு, கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட், நீச்சல் ஆகியவற்றிலும் மற்றும் இதர விளையாட்டுக்களிலும் இலங்கையின் தேசியபோதனாசிரியர்களால் விளையாட்டுச் சம்பந்தமான விரிவுரைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட போதனாசிரியர்கள் சம்பந்தப்பட்ட நலன்களை யாழ்ப்பாணவிளையாட்டுப் போதனாசிரியர் திரு. என். தேவபாலன் மேற்கொண்டுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 7-8-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, எஸ். எம். சர்மா, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை—டபிள்யு. என். தேவகடாச்சம், 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-15 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பாட்டு-தனேஸ்வரி முத்துக்குமாரு 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச் சக்கரம் இலக்கம் 32 — விவியன் நமசிவாயம், 7-45 தமிழ் மூலம் சிங்களம்-என். டி. பீரிஸ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30கலைக்கோலம் —கே. இராஜதுரை, 10-00 நேயர்விருப்பம்.

## வலி. மேற்கு விளையாட்டு போட்டி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

புதிதாகஆரம்பிக்கப்பட்ட வலி.மேற்கு விளையாட்டுப் பிரிவு (1) விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 20ம் 21ம் திகதிகளில் மானிபாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வலிமேற்குப் பகுதியில் கிராமப்புறங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டிகளில பங்கு கொள்ளும். இதற்கான ஒழுங்குகளை வலிமேற்கு விளையாட்டு அதிகாரி திரு. ரி. நடராசா கவனித்து வருகிறார்.

## சிரமதானம்

அடம்பன், ஞாயிறு

திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி ஆற்றில் நிறைந்து கிடக்கும் பன், சம்பூ, பாசி, சேறு அகற்ற 2 நாட்கள் சிரமதான வேலைகள் நடைபெற்றன. முதல் நாள் பரப்பு கடந்தான், வாமதேவபுரம் போன்ற பல கிராமச்சங்கங்களிலிருந்து சுமார் 500 பேர் கலந்துகொண்டனர். மறுநாளும் 250 பேர் கலந்துகொண்டனர். இச்சிரமதானம் கிராம முன்னேற்ற உத்தியோகஸ்தர் திரு. பேக்மன்ஸ் தலைமையில் நடைபெற்றது. அப்போது மாந்தைக் காரியாதிகாரி, மன்னார் காரியாதிகாரிகளும் மற்றும் பலரும் சமூகமளித்திருந்தனர்.

## வரிவிளம்பரம்

### தேவை

**நிருபர்கள்**
புதுச்செய்தி ஏட்டிற்கு நாடெங்கும் நருபர்கள் தேவை. நிர்வாகி, புதுச்செய்தி, 26, கொத்மலை வீதி, தலவாக்கொல்லை. 2474

**மனேஜர்**
புதுச்செய்தி அலுவலகத்திற்கு பிணைப் பணம் கட்டக் கூடிய மனேஜர் தேவை. நிர்வாகி, புதுசெய்தி, 26, கொத்மலை வீதி, தலவாக்கொல்லை. 2473

**டிராக்டர் சாரதி**
கெட்டித்தனம் வாய்ந்த வோட் டிராக்டர் சாரதி தேவை. சம்பளம் ரூபா 250/ — 300/- அசோகா இன்சினியறிங் கோப்பறேஷன், உயிலங்குளம். 2476

### வாடகைக்கு

**வீடு**
சகல வசதிகளுடன் 69-ம் நம். பண்ணை வீதியில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரம்:- இல. 215, K. K. S. ரோட், யாழ்ப்பாணம், 2468

### விற்பனைக்கு

**பாக்குத்தூள்**
பீடாப்பாக்குத் தயாரிப்பவர்களுக்கு தேவையானதுப் பரவான தூள்பாக்கு மொத்தமாகவும்சில்லறையாகவும் விற்பனைக்கு இருக்கிறது. அசோகன்ஸ் 39/4, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2468

**கார்.**
ஆஸ்டின் சோமசெற் EY 7667 இலக்க கார் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிட்டு விலைகோரலாம். ஜானட், 26, மூன்ரும் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2475

**வீடு**
திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக் கருகாமையில் மூன்று பரப்பில் கல்வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ரகுபதி, 108, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 2469

## திருக்குறள் போட்டி

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினர் சமாஜ விழாவை முன்னிட்டு இம்மாத நடுப்பகுதியில் திருக்குறள் எழுத்துப்போட்டியை யாழ்ப்பாணத்தில் நடாத்த ஆயத்தங்களைச் செய்துவருகின்றனர்.

## இந்தியாவுக்கு 3000 திபெத்திய அகதிகள்

புதுடில்லி, ஆக. 5

மூவாயிரத்துக்குமதிகமான திபேத்திய அகதிகள் இந்தியாவுக்கு எல்லைதாண்டி வந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [வெள்ளவத்தை]
ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த





ஏவி எம். புரொடக்ஷன்ஸ்

அன்பே வா

(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர் | இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-00, 7-00, 9-45
THE CARPET BAGGERES
(ADULTS ONLY)



நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
அன்னை இல்லம்



மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
காஞ்சித்தலைவன்



REGAL JAFFNA
Times 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Fred Mac Murroy
Keenam wynn
in
Absent Minded Professor



ராதா மணிமார்க்
சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம். | "பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068



ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்
சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்
தொழில் நிலையங்களுக்குத் தேவையான தற்காலிக கட்டட தளபாடங்கள்
றப்பர் பொம்மைகள்
ஆகியவற்றுக்கும்
எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.
45, அம்பலவாணர் ரோட், யாழ்ப்பாணம்
போன்: 7024


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரின் மறுவாழ்வு

# ‘தெற்கு ராஜ்யங்கள் தான் பொறுப்பை ஏற்கவேண்டும்’

## முதன்மந்திரிகள் கூட்டத்தில் மத்திய மந்திரி ஹாத்தி

சென்னை, ஆகஸ்ட் 5

**இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இந்திய வம்சாவழியினருக்கு மறுவாழ்வளிக்கும் பொறுப்பை முதல் மூன்று ஆண்டுகளுக்காவது தென் ராஜ்யங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மத்திய தொழில்துறை, மறுவாழ்வுத்துறை மந்திரி திரு. ஜெய்சுக்லால் ஹாத்தி இன்று சென்னையில் கூறினார்.**

இலங்கையிலிருந்து, இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்பயிருப்பவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது பற்றி நடைபெற்ற முதல் மந்திரிகள் மகாநாட்டில் திரு. ஹாத்தி உரைநிகழ்த்தினார்.

தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரா ஆகிய மாநிலங்களின் மந்திரிகளும் அதிகாரிகளும் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

அடுத்த ஆண்டில் சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் அல்லது 60 ஆயிரம் பேர் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்புவார்கள். இவர்களுக்கென எப்படியும் 20 ஆயிரம் வேலைவாய்ப்புகளாவது ஏற்படுத்தவேண்டியது அவசியமாகின்றது என்று திரு. ஹாத்தி கூறினார்.

இலங்கையிலுள்ள சுமார் 11 லட்சம் இந்திய வம்சாவழியினரில் 8 லட்சத்து 50 ஆயிரம் பேரின் நிலை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இவர்களில் 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியா திரும்ப வேண்டியிருக்கின்றது. இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதத்தினர் தேயிலைத்தோட்டங்களில் தொழில் செய்கின்றவர்கள். மற்றவர்களில் பெரும்பாலானவர்கள் றப்பர் தோட்டங்களில் தொழில்புரிகின்றவர்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாடு, மைசூர், அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகிய பிரதேசங்களில் ஏற்கனவே உள்ள தோட்டங்களை விஸ்தரிக்கவும், புதிய தோட்டங்களை ஏற்படுத்தவும் வசதியிருக்கிறது என்று மத்திய மந்திரி மேலும் கூறினார்.

இலங்கையிலிருந்துவரும் இந்திய வம்சாவழியினருக்கு வேலைவாய்ப்பு அளிக்குமுகமாக புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு வருமானவரி விலக்களிக்கவும் நிறுவனங்களுக்கு ஊக்கமும் வசதிகளும்கொடுத்துதவவும் முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது என்றும் மத்திய மந்திரி திரு. ஹாத்தி மேலும் விளக்கினார்.

இலங்கையிலிருந்து திரும்புகின்றவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக மைசூர் அரசாங்கம் 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் ரப்பர் அபிவிருத்திக்கென 2 திட்டங்களை ஏற்கனவே தயார்செய்திருக்கின்றது.

---

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## கட்சிவிட்டு கட்சி பாயும் எம்.பிக்கள்

### ‘ஜனநாயகத்துக்கே ஆபத்தானதாகும்’

சண்டிகார், ஆக. 6

‘‘காங்கிரஸிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேரும் சட்டசபை அங்கத்தினருக்கு எதிராகக் காங்கிரஸ் தலைமைப்பீடம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். கட்சிவிட்டுக் கட்சி பாயும் இப் பழக்கத்தை நாம் வளரவிட்டால், அது ஜனநாயகத்துக்கே ஆபத்தாகிவிடும்’’ என்று பஞ்சாப் முதல்மந்திரி திரு. குர்ணம்சிங் இங்கு தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள்...

[4-ம்பக்கத் தொடர்ச்சி]

கைப் போட்டியில் திறமையான முறையில் பயிர் செய்த முதல் மூன்று விவசாயிகளின் விபரங்கள் பின்வருமாறு:-

தீவுப்பகுதிப் பிரிவு: கரம்பனைச் சேர்ந்த பிரான்ஸிஸ் பிள்ளை, காரைநகர் பி. விநாசித்தம்பி, எம். பரமானந்தன்.

வலிகாமம் தெற்கு: சுன்னாகம் திரு. என். சின்னத்துரை உடுவில் கந்தையா அருமைத்துரை, அளவெட்டி என். இராசேந்திரம்.

வலிகாமம் கிழக்கு; அச்சுவேலி என். எஸ். சுப்பிரமணியம், இடைக்காடு என். எஸ். வேலுப்பிள்ளை.

தென்மராட்சி: மட்டுவில் வடக்கு தம்பிரத்தினம், மீசாலை தெற்கு எஸ். இரத்தினசிங்கம், மிருசுவில் வடக்கு வி. சின்னக்குட்டி.

பச்சிலைப்பள்ளிப் பிரிவு: செம்பியன்பற்று வி. நவரத்தினம், நாகலிங்கம் பழனியார்.

கிளிநொச்சி கிழக்குப் பிரிவு: வி. நடராசா, ரி. தாமோதரம்பிள்ளை, பரந்தன் எஸ். சபாரத்தினம்.

கிளிநொச்சி மேற்குப் பிரிவு; என். கே. நல்லதம்பி, எஸ். செல்லையா, வி. சரவணமுத்து.

பரந்தன்பிரிவு: கண்டாவளை பன்றி சுட்டான் வடக்கைச் சேர்ந்த எஸ். கணபதிப்பிள்ளை, எஸ். காசிநாதன்.

துணுக்காய்ப்பிரிவு: வன்னிக்குளம் எஸ். கணபதிப்பிள்ளை கந்தையா சோமசுந்தரம்.

பூநகரிப்பிரிவு: செட்டியகுறிச்சி எஸ். சங்கரப்பிள்ளை, எஸ். சுந்தரமூர்த்தி.

யாழ்ப்பாணப் பிரிவு: நல்லூர் கிராமசேவகர் கே. சண்முகராசா, அரியாலை [illegible] கந்தையா, வி. தில்லையம்பலம்.

ஆறுதல் பரிசுகள் பெறுவோர்: கிளிநொச்சி பி. குணரத்தினம், காரைநகர் எஸ். கந்தையா வட்டுக்கோட்டை மேற்கு வி. சண்முகநாதன், தெல்லிப்பளை கே. பாலசிங்கம், கைதடி வடக்கு பி. சண்முகதேவர், பரந்தன் எஸ். வடிவேலு.

## செய்திச் சுருக்கம்

### பாதை சீர்கேடு

சுழிபுரம். ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்றலிலுள்ள தொல்புரம் நோக்கிச் செல்லும் ஒழுங்கை கவனிப்பாரற்றுக்கிடக்கிறது. ஒழுங்கயை திருத்த இதுவரை சுழிபுரம் கிராமசபையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருத்துவதற்காக முன்வந்த ஒரு குழுவினரும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். இதுவிடயமாக உள்ளூராட்சி அமைச்சருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் இருந்து பனிப்புலம் பண்டத்தரிப்புக்குச்செல்லும் பிரதான பாதை மிகவும் சீர்கேடாக போக்குவரத்துச்செய்ய முடியாமல்இருக்கின்றது. பாதையின் பெரும்பகுதி கிடங்கும் கல்லுமாக உள்ளதால் போக்குவரத்துச்செய்ய முடியாமல் மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

## உரும்பராய் ...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சாலையையும், சந்தையையும் சந்திக்காணியிலேயே நிறுவுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

இந்தப் பிரச்னையால், எட்டு அங்கத்தவரைக் கொண்ட புதிய பட்டின சபையும் நான்கு நான்கு பேர்களாகப் பிரிந்துள்ளது. இதனால் பட்டினசபை அலுவல்களும் தடைப்பட்டுவிடும். இதெல்லாம் ஊருக்கு அழகுமல்ல; நன்மையுமல்ல.

பொதுநலமும், நேர்மையும் வெற்றிகண்டு, கிராமத்தின் முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படுமென நம்புகிறேன்.

ச. செல்லத்துரை.
உரும்பராய்.

---

## ‘உத்தியோக மோகத்தினால் பொருளாதாரம் வீழ்ச்சி’

செட்டிபாளையம், ஞாயிறு

‘‘கிழக்கிலங்கையிலே கலையை வளர்ப்பதற்காகப் பாடசாலைகள் விழாவெடுப்பது பாராட்டக்கூடியதாகும். மேலும் தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் அனைத்தையும் வளர்க்க முயற்சியெடுக்கவேண்டும்’’

இவ்வாறு செட்டிபாளையம் அரசினர் வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைவிழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய பட்டிருப்பு எம். பி. திரு எஸ். எம். இராசமாணிக்கம் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

செட்டிபாளையம் அரசினர் வித்தியாலயம் கல்வி, விளையாட்டு ஆகியதுறைகளில் முன்னேறிக்கொண்டுவருகின்றது. இப்பாடசாலையை மாவித்தியாலயமாக்குவதற்கு என்னாலியன்ற சகல வசதிகளையும் செய்து தருவேனென உறுதிகூறுகின்றேன்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மட்டக்களப்பு பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. ஜே. எஸ். குணவர்த்தன பேசுகையில், ‘‘மக்களிடையே ஏற்பட்ட உத்தியோக மோகம்தான் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகும். பாடசாலைப் படிப்பு புத்தகப் படிப்பாக மாத்திரம் இருக்கக்கூடாது. தொழிற்கல்விதான் முக்கியமான பயனைத் தரக்கூடியது’’ என்று கூறினார்.

பட்டிருப்பு வட்டாரக் கல்வி உதத்தியோகத்தர் திரு. சி. முருகப்பனும் செட்டிபாளையம் வித்தியாலயத்தின முன்னேற்றம் பற்றிக் கூறினார். வித்தியாலய அதிபர் திரு. நொ. க. ஏரம்பமூர்த்தி பாடசாலை அறிக்கை வாசித்துச் சமர்ப்பித்தார்.

## நீர்கொழும்பு தேர்தல் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சுகாதார இலாகாவிலும் பகிரங்கவேலைப்பகுதி இலாகாவிலும் பெரும்பகுதி உத்தியோகத்தர் தமிழர்களாகவே இருக்கிறார்களென்றும் இதுவடபகுதி மக்கள் கல்வியில் பெறும விசேட சலுகையால்தானென்றும் இதை மாற்றி அமைக்குமுகமாக வருங்காலத்தில் தென்பகுதிக்கே விஞ்ஞானக்கல்விக்கு முதலிடம் கொடுக்கப்போவதாகவும் காலியில் நடந்த ஒரு கூட்டத்தில்கல்வி அமைச்சர் திரு. இரியக்கொல்லை குறிப்பிட்டதாக ஒரு செய்தியை பத்திரிகையில் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் நீர்கொழும்பு இடைத்தேர்தல் கற்பித்தபாடத்தை மறந்துவிட்டார் போலத் தெரிகிறது.

நீர்கொழும்பு இடைத்தேர்தல் சிறுபான்மையோரின் சக்தி எவ்வளவென்பதை நாட்டுக்குத் தெளிவாகக்காட்டிவிட்டது.

இந்நாட்டுக்குவந்த கிறிஸ்தவ குருவானவர்கள் இப்பகுதிமக்களுக்கு கல்வித்துறையில் செய்த மாபெருந்தொண்டைநாம் இலகுவாக மறந்துவிட முடியாது. கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்த கல்வி ஸ்தாபனமாக யாழ்ப்பாணக் கல்லூரி விளங்குகின்றதென்றால் அதற்கு கிறிஸ்தவ குருமார் செய்த தியாகமும் அதிபர் செல்லையா போன்றோர் செய்த தன்னலமற்ற சேவையுமேகாரணமாகும்.

இப்படிதியாகத்தின் அடிப்படையில் மிகப்பெரிய இடர்களுக்குட்பட்டு சிறந்த கல்வி ஸ்தாபனங்களை உருவாக்கி சிறந்தகல்வியை இப்பகுதி மக்களுக்கு தந்தார்கள். இந்தத்தியாகத்தின் தத்துவத்தை உணர முடியாத கல்வி அமைச்சர் பொறுப்பற்ற முறையில் பேசித்திரிவது கல்வி அமைச்சர் என்றதகுதிக்கேபொருத்தமற்றதாகும்.

அரசாங்கம்பாடசாலைகளை ஏற்றதன் பின்பு கல்வியின் தரம் வெகுவாகக்குறைந்துவிட்டது. ஆசிரியர்கள் தாம் அரசாங்கஊழியர்கள் என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். மாற்றம் வந்தால் எம். பி. வீட்டுக்கு ஓடுகிறார்கள். இந்நிலையில் ஆசிரியர்களைக் கூடககுற்றம் சொல்லிப் பயன் இல்லை அரசாங்கமே அவர்களை இந்நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

### நாட்டிலும் நகரிலும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இதைப் போலத்தான், கண்டி மக்களுக்கு நன்மை செய்யப்போய், சிங்கள அதிகாரங்களின் (பிரபுக்கள்) குரோதத்துக்கு ஆளாகி, ஈற்றில் அவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்ட கடைசி கண்டி மன்னன், ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஒரு தமிழன் என்ற காரணத்தால் இக்காலத்து சிங்கள எழுத்தாளர்களாலும் பேச்சாளர்களாலும் தூற்றப்படுகிறான். அவன் ஒரு கொடுங்கோலன், படுபாவி என்று சிலர் அவனை வைகிறார்கள்.

சேர் போல் பீரிஸ் போன்ற நடுவுநிலைமையான அறிஞர்கள் ஸ்ரீ விக்கிரமனில் யாதாமொரு குற்றம் இல்லையென்றும், அவனுடைய சிங்கள அதிகாரங்களே அவன்மீது கரிபூசி அவனை வஞ்சித்தார்களென்றும் ஐயத்துக்கு இடமில்லாமல் எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவன்மீது அவதூறு சொரியப்படுகிறது.

பழைய சிங்கள-தமிழ் வேற்றுமைகளையும், பகைமைகளையும் பொறுப்பு வாய்ந்தபேச்சாளரும் எழுத்தாளரும்சந்தர்ப்பம்கிடைக்கும்போதெல்லாம் குத்திக்கிளறி தலைக்கு மேல் தூக்கிக் காட்டுவது தேசிய ஒற்றுமைக்கு வழிகோலமாட்டாது.

— வழிப்போக்கன்

வியாபாரம் பெருக
விளம்பரமசெய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org